# கல்விச் சேவையில் காமராஜர் 2.0 வாக திகழ்கிறார் நம் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் நாயகர்..!

**உ**லகளாவிய ரோட்டரி இயக்கம் என்பது, ஐந்து முக்கிய பிரிவுகளின் அடிப்படையிலேயே இயங்கும். இப்பொழுது அது நான்காக மறு சீரமைக்கப்பட்டுள்ளது. அந்த பிரிவுகளில் Public Image என்பதும் முக்கியமான பிரிவு. இந்த ஐந்து பிரிவுகளுக்கும் சங்கத் தலைமை, மாவட்ட தலைமை, உலக தலைமை என்று ஆண்டு தோறும் நியமிக்கப்படுவார்கள்.

இந்த பப்ளிக் இமேஜ் என்பது ரோட்டரி சங்கத்தைப் பற்றியும், அது செய்கின்ற நல்ல காரியங்கள்பற்றியும்பொது மக்களுக்கு விளம்பரப்படுத்துவதற்கான அவென்யூ. ஏன் இந்த அவென்யூ இருக்கின்றது என்று கேட்டால்... ரோட்டரியின் சேவைகள் மக்களுக்குத் தெரிந்தால் தான், அதே போன்று சேவை அல்லது உதவி தேவைப்படும் பயனாளிகள் ரோட்டரியை அணுகுவார்கள்... அதன் மூலம் ஏராளமானவர்களுக்கு நாம் உதவ முடியும் என்பது தான் ரோட்டரி இயக்கத்தின் பதில்..!

ஓக்கே... இப்ப எதுக்கு இதைச் சொல்கிறேன் என்று யாரேனும் நினைக்கின்றீர்கள் என்றால்... நேற்று சென்னையில் தமிழ்நாடு அரசின் சார்பாக நடைபெற்ற “கல்வியில் சிறந்த தமிழ்நாடு” எனும் தலைப்பிலான ப்ளாக் பஸ்டர் விழாவினை தொடர்ந்து சில பொச்செரிப்பாளர்களின் புலம்பல்களுக்கும் அரை வேக்காட்டுத் தனமான கேள்வி களுக்கும் விமர்சனங்களுக்குமான பதிலுரைக்கும் பொருட்டுத் தான் இந்த விவரத்தை பதிவு செய்தேன்.

தி.மு.க. அரசு செய்கின்ற நலத்திட்டங்களை, குறிப்பாக கல்வித்துறையில் பட்டியலிடும் பொழுது, புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், காலைச் சிற்றுண்டி திட்டம், இல்லம் தேடி கல்வித்திட்டம், நான் முதல்வன் திட்டம், கற்றல் மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டம்.... என்று தொடர்ந்து அடுக்கிக் கொண்டே செல்லும் போது...

இதெல்லாம் எதுவுமே புரியாமல் அல்லது தெரியாமல் அல்லது பயன் பெறாமல் அல்லது இவற்றின் பயனாளிகள் யார் என்று தெரியாமல்... சும்மா ஏதேதோ திட்டங்கள் பெயர் சொல்லி அடிச்சி விடுறாங்க... அரசுப் பள்ளிகளில் அது சரியா இருக்கா? இது சரியா இருக்கா? எல்லாம் சரியா இருந்தா ஏன் அதிக மாணவர்கள் தனியார் பள்ளிகளில் சேருகின்றார்கள்? ஏன் இடைநிற்றல் அரசுப் பள்ளிகளில், கல்லூரிகளில் அதிகமாக இருக்கின்றது? அரசுப் பள்ளிக் கல்லூரி மாணவ, மாணவிகள் சாதிக்கின்றார்களா? அவர்களுக்கு படித்த படிப்புக்கு வேலை கிடைக் கின்றதா? வேறு வேறு திறமைகள் அவர்களுக்கு இருக்கின்றதா? அவர்கள் விளையாட்டில் ஆர்வம் காட்டுகின்றார்களா? அதில் உச்சம் தொட அவர்களால் முடியுமா...???

இப்படியான ஒவ்வொரு அரசுப்பள்ளி மாணவனையும், மாணவியையும் அவர்கள் தம் பெற்றோர்களையும் உளவியல் ரீதியாக ஒருவித தாழ்வு மனப்பான்மைக்கு இட்டுச் சென்று, அவர்களை ஒரு மூலையில் முடக்கிப் போட்டு... வேறு எவரும் அரசுப்பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்ப ஐயம் கொள்ளும் சூழல் இங்கு உருவாக்கி வைத்திருப்பதை...

அடித்து உடைத்து... தகர்த்தெறிந்து... அரசுப் பள்ளிக் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு ஒரு சமூக மரியாதையையும், ஊக்கத்தையும், மற்றவர்களுக்கும் அரசுப் பள்ளிக் கல்லூரியை நோக்கி அணி வகுக்கச் செய்யும் உத்வேகத்தையும் மேற் சொன்ன இந்த நிகழ்ச்சி நிச்சயமாக சாதித்திருக்கின்றது..!

துறைக்கு ஒன்று என்ற வகையில் சாதனையாளர்களின் சாம்ப்பிள் மட்டுமே அங்கு மேடையேறி தங்கள் அனுபவங்களை பகிர்ந்து சென்றுள்ளனர். இசை வளம், குரல் வளம், விளையாட்டுத் திறன், மொழித்திறன், கல்வித்திறன் என்று அரசுப் பள்ளிக் கல்லூரி மாணவ, மாணவிகளின் அசத்தலான விஸ்வரூபம்...

சாதாரணமாக நினைத்து அந்த நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டு வந்திருந்தவர்கள் அனைவரையும் ஒருவித உணர்ச்சி மிகுந்த உணர்வு நிலைக்கு கொண்டு சென்று விட்டது என்றால் அது மிகையல்ல..!

இவை அனைத்தையுமே சாத்தியமாக்கியது பேரறிஞர் அண்ணா, கலைஞர் காலம் தொட்டு இன்றைக்கு திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மிகத் தெளிவான தொலைநோக்குத் திட்டங்கள் தான் என்பதை நடுநிலை மனம் கொண்டவர்களுக்கு உறுதியாகப் புரியும்.

இதனிடையே... நடுவாக எம்.ஜி.ஆர். ஆளவில்லையா? ஜெயலலிதா ஆளவில்லையா?




ஏன் எடப்பாடியார் கூட இந்த தமிழ்நாட்டை ஆண்டாரே..?! அவர்களுக்கெல்லாம் இந்த அரசுப் பள்ளி மாணவர்களின் முன்னேற்றத்தில் பங்கில்லையா என்று உமியைக் கொடுத்து விட்டு, அரிசிக்கு பிச்சைப்பாத்திரத்தை ஏந்திக் கொண்டு சிலர் இங்கே வந்து நிற்பார்கள்..!

அவர்களுக்கெல்லாம் என்னுடைய பதில் இது தான். ஆம், நீங்கள் சொன்னவர்களும் தமிழ்நாட்டை ஆண்டார்கள் தான். அவர்களும் இடையிடையே ஆண்ட காரணத்தினால் தான் ஐம்பது ஆண்டு காலத்தில் இந்த உச்சத்தை எட்டியிருக்கின்றோம். அது நடவாமல் போயிருந்தால், 25 ஆண்டுகளுக்கு முன்பே இன்றைக்கு அடைந்திருக்கும் உச்சத்தை அடைந்து... இன்றைய தேதியில் உலகத் தரத்திலான பள்ளிக் கல்லூரி கல்வி இங்கே நம் தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிக் கல்லூரிகளின் வாயிலாகவே அனைத்துத் தரப்பினருக்கும் கிடைத்திருக்கும். தனியார் பள்ளிக் கல்லூரிகளுக்கான தேவைகளும் இங்கே இல்லாமல் போயிருந்திருக்கும்..!

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், நம்ம கிராமத்து ஏழை பாழை வீட்டு நம்ம பிள்ளைகளும் கல்வி கற்கக் கூடாது என்று எண்ணி

**சௌமியன் வைத்தியநாதன்**
கழக இலக்கிய அணி துணை செயலாளர்



செயல்படும் துரோணாச்சாரிகளின் கூட்டம் அன்றைக்கு பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டுமானால், உங்கள் +2 மதிப்பெண்கள் போதாது... நீங்கள் நாங்கள் வைக்கும் Entrance Test எனப்படும் தகுதித் தேர்வில் பாஸாக வேண்டும் என்ற சட்டம் எம்.ஜி.ஆர். ஆட்சியில் இருந்தது. அதை நீக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கலைஞர் போராடிப் போராடிப் பார்த்தார். நடக்கவில்லை.

ஆனால் மீண்டும் கலைஞர் ஆட்சி வந்தவுடனேயேதான் 1989இல் அந்த என்ட்ரன்ஸ் டெஸ்ட் நீக்கப்பட்டு, நம்ம வீட்டுப் பிள்ளைகளும் +2 மதிப்பெண்கள் அடிப்படையிலேயே இஞ்சினியர்களாகவும், டாக்டர்களாகவும் ஆனார்கள்..! பத்தாண்டு காலம் எம்.ஜி.ஆர். ஆட்சி இருந்த காரணத்தினாலேயே நம் பிள்ளைகளின் டாக்டர் எஞ்சினியர் கனவு பாழாய் போனது தான் மிச்சம்..!

அந்தக் கூட்டம் எப்பொழுதுமே கலைஞரைப் பார்த்துக் கேட்கும். எம்.ஜி.ஆர். பத்து வருஷம் உங்களை கூப்புல உட்கார வச்சாருல்ல என்று..?! ஆனால் எம்.ஜி.ஆர். பத்தாண்டு காலம் கூப்புல உட்கார வைத்தது கலைஞரையோ தி.மு.க. வையோ அல்ல... மாறாக அவர் கூப்பில் உட்கார வைத்தது நம் கிராமப்புற, அடித்தட்டு ஏழை எளிய மக்களின் பிள்ளைகளைத் தான் என்பது இப்பொழுது புரிய வைக்கப்பட வேண்டும்..!

அதே போன்று ஜெயலலிதா ஆட்சிக் காலங்களில்தான், அரசுப்பள்ளி ஆசிரியர்கள் லட்சக்கணக்கானோரை சிறையில் அடைத்ததும்... அவர்களை ஒரே கையெழுத்தில் வேலையை விட்டு வீட்டுக்கு அனுப்பி, அவர்களை கல்வி கற்பிக்கும் நிலையிலிருந்து மாற்றி ஒருவித டென்ஷனிலும் பயத்திலும் வைத்திருந்து... ஒவ்வொரு பட்ஜெட்டிலும் கல்வித் துறைக்கு மிக மிகக் குறைவான நிதி ஒதுக்கி அரசுப் பள்ளிகளில் கட்டிடங்கள், ஆய்வகங்கள், விளையாட்டு மைதானங்கள், உபகரணங்கள் என்று எந்தவித முன்னேற்றமும் ஏற்படுத்தாமல், மறைமுகமாக தனியாரை கல்வி நிலையங்களில் ஊக்கப்படுத்தியதும்... கலைஞர் ஆட்சியில் கொண்டு வந்த சமச்சீர் கல்வியை தடுத்து நிறுத்தி... பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்குமான கற்றல் ஏற்ற இறக்கங்களை நிலை பெற வைக்க முயற்சித்ததும் என்று அரசுப் பள்ளிக் கல்லூரிகள் மீது... அதாவது அடித்தட்டு, ஏழை எளிய கிராமப்புற மாணவ, மாணவிகளின் கல்வி கற்றல் மீது ஒரு ஸர்ஜிகல் ஸ்ட்ரைக் நடத்தினார் என்றே சொல்ல வேண்டும்..!

சொல்லவே வேண்டாம்... எடப்பாடி பழனிசாமி காலத்தில் தான்... கிராமப்புற அடித்தட்டு ஏழை எளிய மாணவ, மாணவிகளின் மருத்துவப் படிப்புக் கனவுக்கான எமன் நீட் தேர்வு தமிழ்நாட்டில் அனுமதிக்கப்பட்டது. ஒன்றிய அரசு கல்வி மீது திணிக்கும் அத்தனை அநீதிகளுக்கும் சிவப்புக் கம்பளம் விரிக்கப்பட்டது.

திராவிடக் கட்சியின் ஆணி வேரான நீதிக் கட்சி ஆட்சியில்தான் இந்திய விடுதலைக்கு முன்பாகவே ஏழை மாணவர்களை பள்ளிகளில் படிக்க வைக்க மதிய உணவுத் திட்டம் சென்னை மாநகரில் துவங்கப்பட்டது... அதன் பிறகு விடுதலைக்குப் பிறகான ராஜகோபாலாச்சாரியார் ஆட்சியில் குலக்கல்விக்காக மூடப்பட்ட அரசு பள்ளிகளை, அடுத்து வந்த காமராஜர் ஆட்சிக் காலத்தில் திறந்து, நின்று போயிருந்த மதிய உணவுத் திட்டத்தை மீண்டும் கொண்டு வந்ததோடு மட்டுமல்லாமல், அதை தமிழ்நாடு முழுமைக்கும் அறிவிக்கப்பட்டது.

அடுத்து வந்த அண்ணா, கலைஞர் ஆட்சிக் காலங்களில் பள்ளிக் கல்வி முடித்தவர்கள் தொடர்ந்து படிக்க உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்... தொடர்ந்து அரசுக் கல்லூரிகளும், பெண்கள் கல்லூரிகளும் கூட நிறைய நிறைய நிறைய திறக்கப்பட்டன. அடுத்து வந்த எம்.ஜி. ஆர். மதிய உணவுத் திட்டத்திற்கு சத்துணவுத் திட்டம் என்று பெயரை மட்டும் மாற்றி அறிவித்து விளம்பரப்படுத்தினார்.

மீண்டும் வந்த கலைஞர் ஆட்சியில் அதை உண்மையான சத்துணவாக மாற்றி அதில் முட்டை, கடலை, வாழைப்பழம் போன்றவற்றை மாணவர்களுக்கு வழங்க உத்தரவிட்டார்.

இதோ இப்பொழுது ஆண்டு கொண்டிருக்கும் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் நாயகரோ... தமிழ்நாடு முழுவதுமுள்ள அரசுப்பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் அனைத்திலும் காலைச் சிற்றுண்டித் திட்டத்தையும் கொண்டு வந்து இன்னும் கூடுதலான மாணவ, மாணவிகள் அரசுப் பள்ளிகளில் சேரும் நிலையை ஏற்படுத்தியுள்ளார்.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்று டிப்ளமோ உட்பட அனைத்து வகையான கல்விக்காகவும் கல்லூரியில் சேரும் மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் கீழும்... மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் மூலமும் மாதம் ரூபாய் ஆயிரம் வழங்கி தமிழ்நாட்டின் உயர் கல்வியில் சேருகின்ற மாணவ, மாணவிகளின் சதவிகிதத்தை இந்திய சதவிகிதத்திலிருந்து ஒரு மடங்கு அதாவது 100 சதவிகிதம் உயர்த்தி சாதனை படைத்துள்ளார்..!

அப்படி உயர்கல்வி பயிலும் மாணவர்கள் வேலைக்குச் செல்லும் தகுதியில்லாதவர்களாக இருக்கின்றார்கள் என்ற அந்தக் கூட்டத்தின் ஏளனப் பேச்சுக்களை புறம் தள்ளி வைத்து விட்டு, நம் மாணவ மாணவிகளை, உண்மையான திறனாளர்களாக மாற்றி வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதற்காக “நான் முதல்வன்” என்ற திட்டத்தை உருவாக்கி அதன் மூலம் உலக அளவில் சாதனை படைத்தவர்கள் நேற்று மேடை ஏற்றி அவர்களை மட்டுமல்லாது, ஒட்டுமொத்த அரசுப் பள்ளி மாணவ, மாணவிகளையும் பெருமை கொள்ளச் செய்திருக்கின்றார் நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்..!



திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி வட்டாரம், உடையமுத்தூர் செயின்ட் மேரிஸ் பள்ளியில் நடைபெற்ற ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ சிறப்பு மருத்துவ முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி க.சிவசௌந்தரவள்ளி தலைமையில் மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. சி.என்.அண்ணாதுரை எம்.பி. முகாமை தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார்கள். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, அ.மோகன்ராஜ், கே.முருகேசன், கே.ஏ.குணசேகரன், ஏ.சி.சுரேஷ்குமார், சு.அரசு, ஆர்.தசரதன் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ஆட்சியில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11.12 சதவிகிதமாக உயர்ந்துள்ளது!

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேச்சு!

*திருவள்ளூர், அக். 1 -*

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் தமிழ் நாட்டை தலைகுனிய விடமாட்டேன் ஓரணியில் தமிழ்நாடு தீர்மானம் ஏற்பு கூட்டம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் நசரத்பேட்டையில் நடைபெற்றது இதில் மாவட்ட அவைத் தலைவர் மா.இராஜி தலைமை வகித்தார் ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் வரவேற்புரையாற்றினார்

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சரும் மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர்

கழக கொள்கை பரப்புச் செயலாளர் சி.வி.எம். பி.எழிலரசன் எம்.எல்.ஏ, திராவிட இயக்கம் சிந்தனையாளர் நாஞ்சில் சம்பத் ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு சிறப்புரையற்றினார்கள்

அப்போது பேசிய அமைச்சர் தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு உரிமை தொகை தமிழக அரசு வழங்கி வருகிறது. பேருந்தில் மகளிருக்கு விடியல் பயணம் திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருகிறோம். 18 லட்சம் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு திட்டத்தை அறிமுகப்படுத்தி நமது முதல்வர் சிறப்பாக செயல்படுத்தி



வருகிறார். தமிழகம் என்ற நாடு தனித்தமிழ் நாடாக இருந்திருக்குமேயானால் அந்த நாடு உலகத்திலேயே 18வது பொருளாதார வல்லரசாக இருந்திருக்கும் என பிரபல ஆய்வறிக்கை வல்லுநர் தெரிவித்துள்ளார். தமிழகத்தின் தமிழ் நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ஆட்சியில் பொருளாதார வளர்ச்சி 11.12 சதவீதமாக உயர்ந்துள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சி முடிவில் 1.நான், தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விகிதத்தைக் குறைக்கும் நியாயமற்ற தொகுதி மறுவரையறைக்கு எதிராகப் போராடுவேன். தமிழ் நாட்டைத் தலை குனிய விடமாட்டேன்

2.நான், வாக்காளர் பட்டியல் மோசடி மூலம் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் SIRக்கு எதிராக நிற்பேன். தமிழ்நாட்டைத் தலை குனியவிட மாட்டேன்

3.நான், நீட் மற்றும் இளைஞர்களை முடக்கும் எந்தவொரு திட்டத்தையும் எதிர்த்து நிற்பேன், நம் மாணவர்களுக்கு உரிய நிதிக்காகப் போராடுவேன். ஒருபோதும் தமிழ் நாட்டைத் தலை குனிய விடமாட்டேன்

4.நான், தமிழ் மொழி, பண்பாடு மற்றும் பெருமைக்கு எதிரான எந்தவொரு பாகுபாட்டையும் எதிர்த்துப் போராடுவேன். எதற்காகவும் தமிழ்நாட்டைத் தலை குனிய விடமாட்டேன்

5.நான், பெண்கள், விவசாயிகள், மீனவர்கள், நெசவாளர்கள், தொழிலாளர்கள் என ஒவ்வொரு உழைக்கும் வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாக்கத் தேவையான நிதிக்காகப் போராடுவேன். தமிழ் நாட்டைத் தலை குனிய விடமாட்டேன் என அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் உறுதி மொழி வசிக்க தொடர்ந்து கழக நிர்வாகிகள் மற்றும் மகளிர் அனைவரும் உறுதி மொழி ஏற்றுக் கொண்டனர் மற்றும் மற்றும் கழக நிர்வாகிகள் 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர். முடிவில் கிளைச் செயலாளர்கள் ஆர்.தேவதாஸ், டி.தருமன், ஜெயராமன், ந.ச. பாலா நன்றி கூறினார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.என். சுப்பிரமணியன்

**அக்டோபர் 1 (2015)**



**1956ஆம் ஆண்டில் கழக உறுப்பினராகி கழகப் பணியாற்ற துவங்கினார்.**

**25 ஆண்டுகள் தொடர்ந்து ஆற்காடு நகரச் செயலாளராகவும், 8 ஆண்டுகள் மாவட்டப் பொருளாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர். அத்தோடு, பத்து ஆண்டுகள் தலைமை தணிக்கைக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**1996ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**